இதனைப்பற்றி என்ன? ....

# மேய்ப்புப்பணிக்குப் பெண்களைப் பிரதிஷ்டைசெய்தல்

எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே உங்களுக்கு வாழ்த்துக்கள். பல அவைப்பிரிவமைப்புகளும், சில லூத்தரன் சபைகளுங்கூட பெண்களை மேய்ப்புப்பணிக்கு பிரதிஷ்டை செய்வதுண்டு. இந்த விடயத்தில் எமது நிலைப்பாட்டைப்பற்றிக் கேள்வி கேட்பவர்களுக்கு சாந்தபான பதிலீடையும் விளக்கத்தையம் மீசூரி திருப்பேரவை லூத்தரன்கள் வழங்குவது முக்கியமானதாகும். சத்தியத்தை அன்பிலே பேசுவதற்கு எமக்கு ஒரு வாய்ப்பு உள்ளது.

## மேய்ப்புப் பணியிலே பெண்கள் சேவிப்பதைப்பற்றித் தேவன் சொல்வதென்ன?

தனது வார்த்தை மூலமாக சபையிலே பெண்கள் மேய்ப்பர்களாகச் சேவிக்கும் பொறுப்பு வழங்கப்படக்கூடாது எனக் கர்த்தர் நமக்குக் கற்பிக்கிறார். பின்வரும் கூற்றுக்களை நாம் வாசிக்கிறோம்:

"பரிசுத்தவான்களுடைய சபைகள் எல்லாவற்றிலும் (இருப்பதுபோல) சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமல் இருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும், வேதமும் அப்படியே சொல்கிறது... நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள்.." (1 கொரி. 14:33–34, 37)

"ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கம் உள்ளவளாய் இருந்து, அமைகதலுடன் கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாய் இருக்கவேண்டும்" (1 தீமோ. 2:11–12)

"கண்காணி(யாக) விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் .. கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனுமாய் ... இருக்கவேண்டும். (1 தீமோ. 3:1–2)

".. பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கு, உன்னைக் கிரேத்தாவிலே விட்டுவந்தேனே. குற்றஞ்சாட்டப் படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும்" (தீத்து 1:5–6)

தேவன் தனது சபைக்குப் பல கொடைகளை வழங்கியிருக்கிறார். அந்தக் கொடைகளுள் ஒன்று வெகுஜன, மேய்ப்புப்பணியின் அலுவல். தேவன் தருகிறவைகளை, அவர் தரும் வழிவகைகளிலே, அவர் தரும் வடிவத்திலே நாம் பெற்றுக் கொள்கிறோம். தேவனிடம் நாம் அவரது கொடை அவ்வளவாக நல்லதாக இல்லை என்று கூறுவதில்லை அல்லது அவர் கொடையை வழங்கிய வடிவம் எமக்குப்பிடிக்கவில்லை என்று கூறுவதும் இல்லை. தேவனுடைய கொடையை அவர் தருகிற பிரகாரமாகவே நாம் நன்றியுடனும் துதியுடனும் பெற்றுக்கொள்கிறோம். மீட்கப்பட்ட ஜனங்களாக, சபையிலும் எமது அனுதின வாழ்விலும் தேவனைச் சேவிப்பதற்கு அவர் நமக்கு வழங்கியுள்ள வாய்ப்புகளிலே நாம் களிகூர்கிறோம்.

தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருக்கவிரும்புகிற சபையானது மேய்ப்புப்பணி அலுவலுக்குப் பெண்கள் பிரதிஷ்டை பண்ணப்படுவதை அனுமதிக்க முடியாது.

## நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது. இந்த வார்த்தைகள் பெண்களும் மேய்ப்பர்களாகப் பணியாற்றலாம் என்பதைச் சுட்டிக்காட்டவில்லையா?

பரி. பவுல் கலாத். 3:28 இலே கூறியுள்ள வார்த்தைகளைப் பெண்கள் மேய்ப்பர்களாகப் பணியாற்றுவதற்கான ஆணையாகக் கொள்ளும் சபைகள் உள்ளன: "யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள்."

ஆனால் இந்த வசனமானது குறிப்பிடும் குழுக்களிடையே வேறுபாடு எதுவும் இல்லை எனக் கற்பிக்கவில்லை; மாறாக, எமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலே அனைத்துக் கிறிஸ்தவர்களும் கொண்டிருக்கும் இரட்சிப்பின் சமத்துவத்தையே அது கற்பிக்கிறது. அனைத்து நபர்களுமே சமமான பாவிகள் எனவும் இயேசுக்கிறிஸ்து ஊடாகத் தேவனால் சமமாக இரட்சிக்கப்படுகிறார்கள் எனவும் நாம் அறியும்படியாகப் பவுல் விரும்புகிறார்.

கலாத். 3:28 ஆனது வேறு இடத்திலே பவுல் கூறியுள்ள கருத்துக்களுடன் முரண்படவோ அல்லது அவற்றைக் கவிழ்த்துப்போடவோ இல்லை. இந்தப்பகுதி பெண்களின் பிரதிஷ்டை பற்றிய விடயத்தைப் பேசவில்லை; மாறாக, கிறிஸ்துவிலே எமது இரட்சிப்பின் சமத்துவத்தைப்பற்றிப் பேசுகிறது, அதற்காக நாம் திரியேக தேவனைத் துதிக்கிறோம், ஆனாலும் அனைவருமே மேய்ப்பர்களாகப் பணியாற்றலாம் என்பது இதன் கருத்து அல்ல.

## ஆண்களும் பெண்களும் சம உரிமை கொண்டிருந்தால், பெண்கள் ஏன் மேய்ப்பர்களாகப் பணியாற்ற இயலாது?

பெண்களின் பிரதிஷ்டை விடயமானது ஒரு "மனித உரிமைகள்" விடயமோ அல்லது "சபைப் பாரம்பரிய" விடயமோ, அல்லது வேறு மனித கருத்துக்கள் அல்லது முறைமைகளின் விடயமோ அல்ல. அது "பெண்களுக்கெதிரான பாகுபாடோ" அல்ல.

எமது கலாச்சாரத்தில் உள்ள பல சமூக சீர்திருத்த வாதிகள் ஆண்களும் பெண்களும் முற்றுமாக மாற்றீடு செய்யப்படலாம் என்பதையும், அத்துடன் அவர்களது தேவன் அருளிய வேறுபாடுகள் உலகின் இந்த வாழ்விலே எவ்விதமான தாக்கத்தையும் கொண்டதல்ல என்பதையும் நாம் நம்பும்படி எதிர்பார்ப்பார்கள். இது இயற்கையின் தெளிவான சான்றுக்கு எதிராகச் செல்வது மாத்திரமல்லாமல், அது வேதாமத்துக்கும் முரண்பாடானதாகும். தேவனுடைய சிருஷ்டிப்பைப் பற்றி வேதாகமம் வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கற்பிக்கிறது.

வேத ஆகமங்கள் ஆண் பெண் ஆகிய இருதிறத்தாருமே தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்டதாகக் கற்பிக்கிறது, ஆனாலும் அவர்கள் இருவருமே தேவனுடைய இரண்டு வேறுபட்ட விசேஷ சிருஷ்டிப்புக்கள். மானிடத்தை ஆணாகவும் பெண்ணாகவும் சிருஷ்டித்த தேவனுடைய ஞானத்துக்காக அவ்வரை நாம் துதிக்கிறோம்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபட்டதான பொறுப்புக்கள் மற்றும் கடமைகளைத் தேவன் கொடையாக வழங்கியுள்ளார் என நாம் நம்புகிறோம். உதாரணமாக, ஆண்கள் தேவனால் கணவர்களாயும் தந்தைகளாயும் இருக்கும்படி அருளப்பட்டனர்; பெண்கள் தேவனால் மனைவிகளாயும் தாய்மாராயும் இருக்கும்படி அருளப்பட்டனர். அதேபோலவே சபையிலும், தேவன் ஆண்களையும் பெண்களையும் வேறுபட்ட ஆனாலுங்கூட மிகைநிரப்புவதாய் உள்ளதான சேவையின் வாய்ப்புக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் கொடையருளியுள்ளார்.

## சபையிலே ஆண்களினதும் பெண்களினதும் வகிபங்குகள் எவை?

ஆண்களும் பெண்களும் இணைந்தவர்களாகத் தமது கர்த்தரும் மீட்பருமான இயேசுக்கிறிஸ்துவைச் சேவிக்கிறார்கள். சபையின் ஆன்மீகத் தலைவர்களாய் இருக்கும் தெய்வீகக்

கடப்பாட்டை ஆண்கள் கொண்டுள்ளனர். இந்தக் காரியத்திலே ஆண்களுக்கு உறுதுணையாக இருக்கும்படியாகப் பெண்கள் அழைக்கப்பட்டுள்ளனர். சபையில் நாம் செய்யும் காரியங்களுக்கு சேவை பற்றிய மனப்பான்மையே வழிநடாத்துகிறதே ஒழிய, "உரிமைகள்" பற்றிய கோரிக்கையோ அல்லது "ஒருவர் மீது ஒருவர் ஆளுகை" பற்றிய மனப்பான்மையோ அல்ல. நமக்கு ஒரே கர்த்தரும் ஏஜமானருமான இயேசுக்கிறிஸ்து இருக்கிறார். அவர் விரும்பும் வழிமுறைகளிலே நாம் அவரைச் சேவிக்கிறோம்.

ஒரு சில தகைமைபெற்ற ஆண்களுக்கு மாத்திரமே மேய்ப்பர்களாகச் சேவிக்கும்படிக்கான பொறுப்பைத் தேவன் வழங்கியிருக்கிறார். சபையானது இந்த மனிதர்களை இயேசுக் கிறிஸ்துவின், தேவனுடைய மைந்தனின் பிரதிநிதிகளாக, மேய்ப்பர் அலுவலிலே சேவிக்கும்படி அழைக்கிறது. பெண்கள் இப்படியாக அழைக்கப்படுவதில்லை, ஏனெனில், இந்தப் பொறுப்பைத் தேவன் பெண்களிடம் ஒப்புவிக்கவில்லை.

இயேசு ஏன் ஒரு பெண்ணை அப்போஸ்தலராகச் சேவிக்கும்படி அழைக்கவில்லை? அப்போஸ்தலனாகிய பவுல் பெண்கள் சபையிலே மேய்ப்பர்களாக சேவிப்பதைத் தடைசெய்தார்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் தேவனிடம் விட்டு விடவேண்டும். தேவனால் அவருடைய வார்த்தையிலே வழங்கப் பட்டிருப்பதுடன் நாம் தரித்திருக்கட்டும். பெண்களை மேய்ப்பர் அலுவலுக்கு அழைத்து பிரதிஷ்டை பண்ணும் தெரிவினைத் தேவன் சபைக்குத் தரவில்லை. இந்த விடயங்களிலே தேவனுடைய சித்தத்தை நாம் கனம்பண்ணி மதித்து, அவரைச் சேவிக்குபடி ஆண் பெண் இருதிறத்தார்களுக்கும் அவர் வழங்கியுள்ள அற்புதமான வாய்ப்புக்கள் உட்பட, அவர் எமக்குத் தந்துள்ள அநேக கொடைகளுகாக அவரைத் துதிக்கிறோம்.

## அப்படியாயின் ஒருசில சபைகள் ஏன் பெண்களை மேய்ப்பர்களாகப் பிரதிஷ்டை செய்கின்றனர்?

இவ்விடயத்திலும், ஏனைய பல விடயங்களைப்போலவே, நாம் பிற சபை அலகுகளுடன் வேறபடுவதற்குக் காரணம், வேதாகமத்தையிட்டதான மனப்பான்மையிலே வேறுபடுவதிலேயே தங்கியுள்ளது.

பரிசுத்த வேத ஆகமங்கள் எமக்கான தேவனுடைய பூரணமானதும் பிழையற்றதுமான வெளிப்பாடு எனும் சத்தியத்தை எமது திருப்பேரவை உறதிசெய்கிறது. தேவன் தனது வார்த்தையிலே எமக்கு வழங்கியுள்ளவற்றை நாம் பெற்றுக்கொள்கிறோம். அந்த வார்த்தையைப் பராமுகமாக விட்டுவிடவோ, புறக்கணிக்கவோ, அதனை விளக்கித் தள்ளிவைக்கவோ அல்லது அப்போஸ்தலன் பவுலூடக கர்த்தர் வெளிப்படுத்தியவற்றை உதாசீனம் செய்யவோ எமக்கு சுயாதீனம் கிடையாது.

பெண்களைப் பிரதிஷ்டை செய்யும் சபைகள் பரி. பவுலின் எழுத்துக்களை அவரது சொந்த கருத்தெனக் கருதும்படியாகத் தெரிவு செய்துள்ளன. பரி. பவுல் ஒன்றுக்கும் மேற்பட்ட தருணங்களிலே இந்த விடயத்தை திரும்பத்திரும்ப உரைத்திருப்பதாலும், வெளிப்படையாகவே அது தனது தனிப்பட்ட கருத்து அல்ல, மாறாக கர்த்தரின் கட்டளை என்று கூறியிருப்பதாலும், இவைகளின் வெளிச்சத்திலே அப்படியான ஒரு நிலைப்பாட்டை அவர்கள் பேணுவது கடினம்.

## உண்மைத்தனமான லூத்தரன்கள் எப்படியாக பெண்கள் பிரதிஷ்டைக்குப் பதிலீடு கொடுக்கலாம்?

முதலாவதாக, இந்த விடயத்தைப்பற்றி நாம் தற்காப்புநிலைப்பாட்டையோ அல்லது விரோதமனப்பான்மையையோ கொள்ளக்கூடாது. மாறாக, நாம் சத்தியத்தை அன்புடன் பேசி, எமது நம்பிக்கைக்குச் சான்று பகர்ந்து, "இதுதான் நாம் நம்புவதும், கற்பிப்பதும், அறிக்கையிடுவதும், கைக்கொள்ளுவதும்" என்று கூறும் இன்னுமொரு வாய்ப்பாக நாம் இதனை இனங்கண்டு கொள்ளவவேண்டும்.

இரண்டாவதாக, பெண்களை பிரதிஷ்டை செய்யும் சபைகளைச் சார்ந்தவர்களுடன் நாம் அன்புடனும் பரிவுடனும் இருக்கவேண்டும். பல சந்தர்ப்பங்களிலே இது ஏன் செய்யப்படுகிறது என்பதைப்பற்றி அவர்கள் அறியாதவர்களாக உள்ளனர். அவர்கள் தப்பான தகவல்கள் வழங்கப்பட்டவர்களாய், பெண்களைப் பிரதிஷ்டை செய்வது என் தேவனுடைய வார்த்தைக்கு முரணாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளக்கூடிய தெளிவான வேதாகம அத்திவாரம் இல்லாதவர்களாய் இருப்பதுண்டு. இந்த விடயங்களை அன்புடனும், பரிவுடனும் பாசத்துடனும் நாம் அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

மூன்றாவதாக, பெண்கள் சபையிலே கர்த்தரை நிறைவான விதத்திலே எப்படியாகச் சேவிக்கலாம் என்பதை விளக்குவது எமக்கு முக்கியமானதாகும். லூத்தரன் சபை–மிசூரி பேரவையிலே பெண்கள் முழுநேர சபைப்பணியாளர்களாகப் பணியாற்றக்கூடிய பல வழிமுறைகள் உள்ளன. ஆசிரியர்களாக சேவித்தல், கிறிஸ்தவக் கல்வி இயக்குனர்களாக, கிறிஸ்தவ வெளிக்களச் சந்திப்பு இயக்குனட்களாக, பந்திவிசாரணையாளர்களாக, மற்றும் சேகர தாதியர்களாக போன்றவைகள் இதற்குள் உள்ளடங்கியுள்ளது. பொதுநிலைப்பெண்கள் தன்னார்வ ஆசிரியர்களாப் பணியாற்றுவதற்கு மேலதிகமாக பல்வேறு சபை சமூகங்கள், கழகங்கள், கூட்டிணைவுகள் போன்றவைகளூடாக சேவிப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. அவர்களது உள்ளூர் அவைகளிலே பல்வேறு நிர்வாகக் குழுக்கள் மற்றும் கமிட்டிகளிலே அங்கத்தவர்களாகச் சேவிக்கும் மேலதிக வாய்ப்புக்களும் அவர்களுக்கு உண்டு. பெண்களின் சேவையினால் சபைக்கு வரும் பல ஆசீர்வாதங்கள் மற்றும் கொடைகளுக்காக நாம் தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

தேவன் தன்னைத் தனது ராச்சியத்திலே சேவிக்கும்படியாக ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் தந்துள்ள வாய்ப்புக்களை நாம் வலியுறத்தியாகவேண்டும். "உரிமைகள்" எனும் சுயம் சார்ந்த கோரிக்கைகளுள் நாம் சிக்குப்படும்படியாக எம்மை அனுமதித்து, சேவைக்கான எமது கர்த்தரின் அழைப்பிலிருந்து எமது பார்வையை எடுத்துப்போடுவது எவ்வளவு துரதிஷ்டமானதாக இருக்கும். தேவன் வழங்கியிராதவற்றை அவரிடம் கோருவது தேவனுடைய பிள்ளை என்பதன் அர்த்தத்துக்கு முரணானதாகும். எமது நோக்கக் குவியமானது அன்பிலும் ஒருவரையொருவர் சேவிப்பதிலும் இருந்தால், எம் அனைவருக்கும் செய்யத்தக்கதாக அளவுக்கதிக மானவைகள் அங்கு உள்ளதென்பதை உணர்ந்துகொள்வோம்.

நாம் ஒருவரையொருவர் அன்பிலே, எமது சேவையை தேவனுடைய வார்த்தைக்கு அமைவானதாக்கி சேவிக்கிறோம். சபையில் உள்ள எவருமே வேறு ஒருவருக்கு மேலாக "எஜமானாக" இருக்கும்படி அழைக்கப்படவில்லை. மேய்ப்பர்கள், கிறிஸ்துவின் வார்த்தை மற்றும் திருவருட்சாதனங்களுடன் தேவனுடைய ஜனங்களிலே கரிசினைகாட்டும் கிறிஸ்துவின் ஊழியர்கள். எனவே, இந்தக் கொடைகளூடாக, தனது பிதாவின் சித்தத்துக்கு ஏற்ப தாழ்மையான தியாக சேவையிலே, எமது கர்த்தர் எமது இரட்சிப்புக்காகத் தன்னைக் கிருபையாக வழங்கியிருக்கிறார். கிறிஸ்துவின் பல கொடைகளுக்காக எமது உள்ளத்திலே நன்றியுடன் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுவதற்கு இயலுமாக இருப்பதற்கு நாம் சிலாக்கியம் பெற்றவர்கள். மிகமுக்கியமாக மன்னிப்பின் கொடையும், ஜீவன் மற்றும் இரட்சிப்பின் கொடையும். தேவன் அவருக்கான எமது சேவையை, எமது கர்த்தராகிய கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நிமித்தமாக ஆசீர்வதிப்பாராக.

கலாநிதி A.L. பர்றி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை